DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 65/2018

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**A2 எதிரி ஆஜர் A1, A3, A4 எதிரிகள் ஆஜரில்லை. A1 எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | சுந்தரமூர்த்தி |
| Father / Husband Name | குப்பன் |
| Village | மாலிகைமேடு |
| Taluk | பண்ருட்டி |
| Age | 80 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 26.**05.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மாலிகைமேடில் வசித்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். 02.05.2017 ம் தேதி எனது மகன் சுகுமார் துபாயில் இருந்து வந்தவரை அழைப்பதற்காக விக்னேஷ் என்பவரை PY 01 AS 6661 என்ற இனோவா காரில் அனுப்பி வைத்தேன். அவர் இரவு சுமார் 11.00 மணியளவில் அச்சிறுபாக்கம் டோல்கேட் அருகே இடது புற ஓரமாக வண்டியை நிறுத்திவிட்டு காலை கடனை முடிக்க சென்றவரை இருட்டில் இரண்டு நபர்கள் விக்னேஷ் என்பரின் கழுத்தில் கத்தி வைத்துக்கொண்டு செல்போன் இனோவா வண்டியின் கார் சாவி மற்றும் ரூபாய் 1500 ஐ மிரட்டி பறித்துக்கொண்டு சென்றுவிட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். பின்னர் காலையில் சம்பவயிடத்தை பார்த்துவிட்டு காவல் நிலையம் சென்றேன். புகாரை விக்னேஷ் என்பவர் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் விக்னேஷ் சொல்லிதான் தெரியும் என்றாலும் சரிதான். புகார் கொடுக்க நான் காவல் நிலையம் போனேனா என்றால் போனேன். போலிசார் என்னை எங்கு விசாரித்தார்கள் என்றால் சம்பவயிடத்திலும் காவல் நிலையத்திலும் விசாரித்தார்கள். புள்ளிவிரத்திற்காக போலிசார் தாக்கல் செய்த பொய் வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

26/5/26

Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 65/2018
Miscellaneous :
Sessions : PW 2
Deposition of Witness for

**A2 எதிரி ஆஜர் A1, A3, A4 எதிரிகள் ஆஜரில்லை. A1 எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | கிருஷ்ணவேணி |
| Father / Husband Name | சுந்தரமூர்த்தி |
| Village | மாளிகைமேடு |
| Taluk | பண்ருட்டி |
| Age | 65 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 26.**05.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மாலிகைமேடில் வசித்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். 02.05.2017 ம் தேதி எனது மகன் சுகுமார் துபாயில் இருந்து வந்தவரை அழைப்பதற்காக விக்னேஷ் என்பவரை PY 01 AS 6661 என்ற இனோவா காரில் அனுப்பி வைத்தேன். அவர் 03.05.2017 ம் தேதி அதிகாலை 1.30 மணியளவில் அச்சிறுபாக்கம் டோல்கேட் அருகே இடது புற ஓரமாக வண்டியை நிறுத்திவிட்டு காலை கடனை முடிக்க சென்றவரை இருட்டில் இரண்டு நபர்கள் விக்னேஷ் என்பரின் கழுத்தில் கத்தி வைத்துக்கொண்டு செல்போன் இனோவா வண்டியின் கார் சாவி மற்றும் ரூபாய் 1500 ஐ மிரட்டி பறித்துக்கொண்டு காருடன் சென்றுவிட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் விக்னேஷ் சொல்லிதான் தெரியும் என்றாலும் சரிதான். யாருடைய காரை எடுத்து சென்றார்கள் என்றால் எங்கள் காரை தான் எடுத்து சென்றுவிட்டார்கள். எங்கள் காரை எதிரிகள் எடுத்து சென்றுவிட்டனர். போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. புள்ளிவிரத்திற்காக போலிசார் தாக்கல் செய்த பொய் வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

S. Krishnaveni

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.
26/5/2[illegible]
Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 65/2018
Miscellaneous :
Sessions : PW 3
Deposition of Witness for

**A2 எதிரி ஆஜர் A1, A3, A4 எதிரிகள் ஆஜரில்லை. A1 எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | இளங்கோவன் |
| Father / Husband Name | மாசிலாமணி |
| Village | தொழுப்பேடு |
| Taluk | மதுராந்தகம் |
| Age | 44 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 26.**05.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தொழுப்பேடில் குடியிருந்து டோல்கேட் ஆம்புலன்சில் வேலை செய்து வருகிறேன். 03.05.2017 ஆம் தேதி இரவு சுமார் 1.00 மணிக்கு டோல்கேட் அருகே சென்னை செல்லும் சாலையின் அருகே சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தபோது ஒரு நபர் தன்னை இரண்டுநபர்கள் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி போன் மற்றும் பணம் ஆகியவற்றை பறித்து சென்றதாக என்னிடம் சொன்னார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**குறுக்கு விசாரணை**

2. சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் ஆம்புலன்ஸ் டிரைவர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.
26/5/26
Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 65/2018
Miscellaneous :
Sessions : PW 4
Deposition of Witness for

**A2 எதிரி ஆஜர் A1, A3, A4 எதிரிகள் ஆஜரில்லை. A1 எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | சரவணன் |
| Father / Husband Name | ஏழுமலை |
| Village | ஓங்கூர் |
| Taluk | திண்டிவனம் |
| Age | 41 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 26.**05.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஓங்கூரில் குடியிருந்து ஆத்தூர் டோல்கேட்டில் வேலை செய்து வருகிறேன். சாட்சி கணேஷ்பாபு என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. கடந்த 2017 ஆம் வருடம் இரவு ஒரு நாள் காரில் வந்தவரிடம் மிரட்டி வழிப்பறி செய்யதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 03.05.2017 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு நானும் கணேஷ்பிரபு என்பவரும் ஆத்தூர் டோல்கேட் அருகே நின்று கொண்டிருந்தபோது போலிசார் அங்கு அதிகாலை 1.30 மணிக்கு ஒரு நபரிடம் கத்தியை காட்டி செல் போன் பணம் மற்றும் கார் சாவியை பறித்து சென்ற வழக்கு சம்மந்தமாக போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்களா என்றால் இல்லை. அதில் நானும் கணேஷ்பிரபுவும் சாட்சி கையொப்பம் செய்தோமா என்றால் இல்லை. மேற்படி பார்வை மகசரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறுவிசாரணை இல்லை**

Type written in my dictation to open court read over ... in tamil in the ... accused and admitted ... the witness to be correct.

26/5/26

Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 65/2018
Miscellaneous :
Sessions : PW 5
Deposition of Witness for

**A2 எதிரி ஆஜர் A1, A3, A4 எதிரிகள் ஆஜரில்லை. A1 எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | கணேஷ்பிரபு |
| Father / Husband Name | மகேந்திரன் |
| Village | சாரம் |
| Taluk | திண்டிவனம் |
| Age | 40 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 26**.05.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சாரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி சரவணன் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. கடந்த 03.05.2017 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு நானும் சரவணன் என்வரும் ஓங்கூர் டோல்கேட்டில் வேலை செய்து கொண்டிருந்தபோது கார் காணாமல் போனது சம்மந்தமாக போலிசார் விசாரித்து படம் வரைந்தார்கள். அதில் நானும் சரவணன் என்பவரும் சாட்சி கையொப்பம் போட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. போலிசார் என்னிடம் கையொப்பம் எங்கு வாங்கினார்கள் என்றால் சம்பவயிடத்தில் வாங்கினார்கள். என்னுடன் சரவணன் என்வரும் கையொப்பம் செய்தாரா என்றால் ஆமாம். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தமிழ் படிக்க தெரியும். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் டோல்கேட்டில் வேலை செய்வதால் போலிசார் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

M. கணேஷ்பிரபு

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.
26/5/26
Magistrate No.II
Madurantakam